செ.வெ.எண்: 203/2021 நாள்: 23.05.2021

**திருவண்ணாமலை மாவட்டத்தில் முழு ஊரடங்கு நடைமுறைபடுத்துதல் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஆய்வுக் கூட்டம்...**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (23.05.2021) தமிழ்நாடு அரசு கொரோனா பெருந்தொற்று பரவலைக் கட்டுப்படுத்த அறிவித்துள்ள முழு ஊரடங்கினை நடைமுறைப்படுத்துவது குறித்தான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. செ. அரவிந்த், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. இரா. முத்துகுமரசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. ஆர்த்தி, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள், காவல் துறை, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, கூட்டுறவுத் துறை, ஆவின் உள்ளிட்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், கொரோனா பெருந்தொற்று பரவலைக் கட்டுப்படுத்த தற்போதுள்ள ஊரடங்கினை 24.05.2021 முதல் மேலும் ஒரு வார காலத்திற்கு முழுமையாக எவ்வித தளர்வுகளுமின்றி தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவித்துள்ளார்கள். இந்த முழு ஊரடங்கு காலத்தில் மருந்தகங்கள், நாட்டு மருந்து கடைகள், கால்நடை மருந்தகங்கள், பால் விநியோகம், குடிநீர் மற்றும் தினசரி பத்திரிக்கை விநியோகம் ஆகிய செயல்பாடுகள் அனுமதிக்கப்படும். மேலும், பொது மக்களுக்கு தேவையான காய்கறிகள், பழங்கள், தோட்டக்கலைத் துறை மூலம் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து வாகனங்கள் மூலமாக வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை மூலமாக உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் காய்கறிகள், பழங்கள் வாகனங்கள் மூலம் வழங்குவது குறித்தான ஆய்வுக் கூட்டம் இன்று 23.05.2021 மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது 'நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் நடமாடும் வாகனங்கள் மூலம் காய்கறிகள், பழங்கள் தினமும் காலை 06.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை மட்டும் வழங்குவதற்கு சம்மந்தப்பட்ட வியாபாரிகள், வாகனங்களுக்கு அனுமதி அட்டை வழங்க வேண்டும், விவரங்களை காவல் துறையினரிடம் தெரிவிக்க வேண்டும். மேலும், அனுமதி அட்டையில் வாகன எண், நேரம், தெரு உள்ளிட்ட விவரங்கள் குறிப்பிட வேண்டும். பொது மக்கள் அவர்கள் வசிக்கும் தெரு அல்லது கிராமத்தை விட்டு வெளியில் வராமல், நடமாடும் வாகனங்கள் மூலம் காய்கறிகள், பழங்கள் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும். மேலும், ஒவ்வொரு பகுதியிலும் செயல்படும் மொத்த விற்பனை சந்தையில் சில்லறை விற்பனையாளர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள், பொது மக்களுக்கு அனுமதி கிடையாது. நகராட்சிகள், பேரூராட்சிகள், உள்ளாட்சித் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனை ஆகிய துறைகள் இணைந்து நடமாடும் வாகனங்களுக்கு அனுமதி அளித்து பொது மக்களுக்கு தடையின்றி காய்கறிகள், பழங்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்' என்றார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.